بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰی عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

# பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 03 மே 2019 அன்று ஆற்றிய ஜூமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற பத்ர் போர் சஹாபாக்களில் முதலாவது சஹாபி ஹஸ்ரத் உபைது அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் உபைது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் பத்ர், உஹது, அகழ் போர்களில் கலந்து கொண்டார்கள். இவர்களைக் குறித்து இது தவிர வேறு எந்த விளக்கமும் இல்லை.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் நுஃமான் பின் பல்தமா ஆகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் பாட்டனாரின் பெயர் பல்தமா அல்லது பல்ஸமா என்றும் கூறப்படுகின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் நுஃமான் அவர்கள் அன்ஸார்களைச் சேர்ந்தவர்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் நுஃமான் அவர்கள் பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பேற்றைப் பெற்றார்கள்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமைர் ஆகும். அன்னார் பனு ஜுதாரா கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். பத்ர் போரில் கலந்து கொண்டார்கள்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அம்ர் பின் ஹாரிஸ் ஆகும். அன்னார் பனு ஹாரிஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். ஹஸ்ரத் அம்ர் அவர்கள் ஆரம்ப காலத்திலேயே மக்காவில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இரண்டாவது முறையாக அபிஸீனியாவிற்கு செய்யப்பட்ட ஹிஜ்ரத்தில் அன்னார் பங்கு பெற்றார்கள். அன்னாருக்கு பத்ர் போரில் பங்கு பெறும் நற்பேறு கிடைத்தது.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் கஅப் ஆகும். அன்னார் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாரை போரில் கிடைத்த செல்வத்தை கண்காணிப்பவராக நியமித்தார்கள். அதுமட்டுமின்றி மற்ற சந்தர்ப்பங்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு போரில் கிடைத்த செல்வங்களை கண்காணிக்கும் பொறுப்பு அன்னாருக்கு கிடைத்துள்ளது. அன்னார் உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். அன்னாரது மரணம் மதீனாவில் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 33 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. அன்னாரது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் தொழ வைத்தார்கள். அன்னாரது சுட்டுப் பெயர் அபூ ஹாரிஸ் மட்டுமின்றி அபூ யஹ்யா என்றும் கூறப்படுகின்றது.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் கைஸ் ஆகும். அன்னார் பனு நஜ்ஜாரைச் சேர்ந்தவர். அன்னார் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். ஒரு கூற்றிற்கேற்ப அன்னார் உஹது போரில் ஷஹீதானார்கள் என்றும் இன்னொரு கூற்றிற்கேற்ப அன்னார் உஹது போரில் ஷஹீதாகவில்லை. மாறாக, பெருமானார் (ஸல்) அவர்களுடன் அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள் என்று வந்துள்ளது. அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் ஆகும். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். பத்ர் போரில் சாயிப் பின் உபைது மற்றும் நுஃமான் பின் அம்ர் ஆகியோரை அன்னார் கைது செய்தார்கள். ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஜிஸ்ர் போரில் ஷஹீதானார்கள். ஜிஸ்ர் போர் ஃபராத் நதிக்கரையில் நடந்தது. அன்னாரது மரணம் ஏறக்குறைய 38 வது வயதில் நிகழ்ந்தது என்று கூறப்படுகிறது.

அல்லாமா நூருத்தீன் அவர்களின் புகழ்பெற்ற நூலான சீரத்தே ஹல்பிய்யாவில் பத்ர் போரில் பெருமானார் (ஸல்) அவர்களின் அற்புதங்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ள விஷயம் என்னவென்றால், பத்ர் போரில் ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்களின் வாள் உடைந்து விட்டது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு பேரீத்தம் பழ மரத்தின் குச்சி ஒன்றை கொடுத்தவாறு, இதனைக் கொண்டு சண்டையிடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் அவர்கள் இதனை தமது கையில் எடுத்தவுடன் அதுவொரு சிறந்த வாளாக மாறி விட்டது. பிறகு அது எப்போதும் அன்னாரிடமே இருந்தது.

குரைஷிகள் பெருமானார் (ஸல்) அவர்களையும் கொலை செய்ய ஒரு சூழ்ச்சி செய்திருந்தார்கள்.இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அஹ்ஸாப் போரில் தோல்வியின் நினைவானது குரைஷிகளிடம் மிகவும் கடுமையாக கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த கோபத்தின் நெருப்பானது மக்காவின்

தலைவரான அபூ சுஃப்யானிடம் மிகுதியாகவே காணப்பட்டது. ஏனென்றால் அஹ்ஸாப் போரானது அவரை இழிவடையச் செய்திருந்தது. சில காலம் வரை அபூ சுஃப்யான் இந்த கோபத்தின் நெருப்பில் தம்மைத்தாமே மாய்த்துக் கொண்டிருந்தார். ஆனால் இறுதியில் அவரது கோபம் இதனை பொறுத்துக் கொள்ள முடியாமல் நெருப்பின் ஜுவாளையானது அவரிடமிருந்து வெளிப்பட ஆரம்பித்தது. ஒரு நாள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவாறு குரைஷிகளைச் சார்ந்த சில இளைஞர்களிடம், மதீனாவிற்குச் சென்று மறைந்திருந்தவாறு முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்யும் எந்த ஆண் மகனும் உங்களில் இல்லையா? முஹம்மது வெளிப்படையாகவே தெருக்களில் சுற்றித் திரிவார் என்று கூறினார். அந்த இளைஞர்கள் அவரது எண்ணத்தை செவியேற்றனர்.

இவ்வாறு சில நாட்கள் கூட கழிந்திருக்கவில்லை. அதற்குள், ஒரு தீய இளைஞன் அபூ சுஃப்யானிடம் வந்து, நான் உங்களது திட்டங்களை கேட்டேன். நான் இதற்காக ஆயத்தமாக இருக்கின்றேன். நான் வலிமையான உள்ளத்தைக் கொண்ட, உறுதித்தன்மை கொண்ட மனிதன் ஆவேன். எனது பிடி மற்றும் தாக்குதலிருந்து எவரும் தப்பிக்க முடியாது. எனவே நீங்கள் இந்த பணிக்காக என்னை நியமித்து எனக்கு உதவி செய்தால் நான் முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக செல்ல தயாராக இருக்கின்றேன். மேலும் நான் மதீனாவின் வழிப்பாதைகளையும் நன்கு அறிந்திருக்கின்றேன் என்று கூறினான். இதனைக் கேட்டு அபூசுஃப்யான் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். மேலும் அவர், நீர் எனது எண்ணத்தைக் கொண்ட மனிதராவீர் என்று கூறினான். இதற்குப் பிறகு அபூ சுஃப்யான் அந்த இளைஞனுக்கு வேகமாக செல்லக்கூடிய ஒரு ஒட்டகத்தை வழிப்பாதைக்காக வழங்கி பயணத்திற்கான செலவையும் கொடுத்து அவனை அனுப்பி வைத்தார். மேலும் இந்த இரகசியம் எவருக்கும் தெரிந்து விடக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

மக்காவிலிருந்து வெளியேறிய இந்த இளைஞன் பகலில் ஒளிந்தாவறும் இரவில் பயணம் செய்தவாறும் மதீனாவை நோக்கிச் சென்றான். பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி கேட்டறிந்தவாறு நேரடியாகவே பனி அப்துல் அஷ்ஹலின் கோத்திரத்தின் பள்ளிவாசலுக்குச் சென்றான். அப்போது அங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவன் பள்ளிக்குள் நுழைந்து தம் பக்கம் வருவதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள், இந்த நபர் ஏதோவொரு தீய எண்ணத்தில் வந்துள்ளார் என்று கூறினார்கள்.

இந்த சொற்களைக் கேட்ட அவன் வேகமாக அன்னாரை நோக்கி வந்தான். ஆனால் உஸைது பின் ஹுஸைர் என்ற ஒரு அன்ஸாரி தலைவர் அவனைப் பிடித்தார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அவனிடம், நீங்கள் யார், எந்த எண்ணத்தில் வந்துள்ளீர்கள்? என்று உண்மையைக் கூறுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அவன், அனைத்து விஷயங்களையும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறினான். மேலும், அபூ சுஃப்யான் இந்த இந்த வெகுமதிகளை வழங்குவதாக கூறினான் என்றும் அவன் கூறினான். இதற்குப் பிறகு இந்த மனிதர் சில நாட்களுக்கு மதீனாவில் தங்கினார். பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

கொலை செய்ய வேண்டும் என்ற அபூ சுஃப்யானின் சூழ்ச்சியானது மக்கத்து மக்களின் எண்ணம் மற்றும் நோக்கத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை மிகவும் உறுதிப்படுத்தியது. எனவே அன்னார் அவர்களின் நோக்கம் என்ன? இதற்காக அவர்கள் என்ன மறைமுகமான சூழ்ச்சிகளை செய்கின்றனர் என்பதனை தெரிந்து கொள்வதற்காக அம்ர் பின் உமைய்யா ஸம்ரி மற்றும் சலமா பின் அஸ்லம் (இவர்களைப் பற்றிதான் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது) ஆகிய தமது இரண்டு சஹாபாக்களை மக்காவிற்கு அனுப்பி வைத்தவாறு, அபூ சுஃப்யானின் கொலை செய்யும் சூழ்ச்சி மற்றும் அவன் இதற்கு முன்பு கொலை செய்ய மேற்கொண்ட நடவடிக்கை ஆகியவற்றிற்காக, சந்தர்ப்பம் கிடைத்தால் இஸ்லாத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்திய இந்த எதிரிகளைக் கொன்று விடுவதற்கும் அன்னார் அனுமதி வழங்கினார்கள். ஆனால் உமைய்யாவும் அவர்களுடன் இருந்தவரும் மக்காவை சென்றடைந்ததும் குரைஷிகள் விழிப்படைந்தனர். இந்த இரண்டு சஹாபாக்களும் தமது உயிரை காப்பாற்றியவாறு மதீனா திரும்பினார்கள். வழியில் அவர்களுக்கு குரைஷிகளின் இரண்டு உளவாளிகள் கிடைத்தனர். இந்த இருவரையும் குரைஷிகளின் தலைவர்கள் முஸ்லிம்களின் செயல்பாடுகளைக் குறித்தும், பெருமானார் (ஸல்) அவர்களின் நிலைமைகளைக் குறித்தும் தெரிந்து கொண்டு வருவதற்காக அனுப்பி வைத்திருந்தனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது ஒன்றும் வியப்பிற்குரிய விஷயமல்ல. அதாவது இந்த திட்டமும் கூட பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கான சூழ்ச்சியாக இருக்கலாம். உமைய்யா மற்றும் சலமா பின் அஸ்லம் ஆகியோருக்கு இந்த உளவாளிகள் பற்றி தெரிய வந்ததும் அவர்கள் இந்த உளவாளிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை கைது செய்ய விரும்பினர். ஆனால் அவர்களும் சண்டையிட்டதனால் ஒரு உளவாளி கொல்லப்பட்டான். மற்றொருவனை கைது செய்து மதீனாவிற்கு அழைத்து வந்தனர்.

ஹஸ்ரத் உம்மே அம்மாரா கூறுகின்றார்கள்: ஹுதைபிய்யா உடன்படிக்கை நாளன்று பெருமானார் (ஸல்) அவர்களை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அன்னார் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷர் மற்றும் ஹஸ்ரத் சலமா பின் அஸ்லம் ஆகிய இருவரும் கவசம் அணிந்திருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் நின்று கொண்டு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தனர். அப்போது குரைஷிகளின் தூதுவர் சுஹைல் பின் அம்ர் தமது குரலை உயர்த்தி பேசிய போது இந்த இருவரும் அவரிடம் உங்களது குரலை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் உயர்த்தாதீர்கள். மெதுவாக

பேசுங்கள் என்று கூறினார்கள். இது அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் செய்த குறிப்பான தொண்டு பற்றிய குறிப்பாகும்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உக்பா பின் உஸ்மான் ஆகும். ஹஸ்ரத் உக்பா மற்றும் அன்னாரது சகோதரரான ஹஸ்ரத் சஅது பின் உஸ்மான் ஆகிய இருவரும் பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பேற்றைப் பெற்றார்கள்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சஹல் ஆகும். அன்னார் ஹஸ்ரத் ராஃபி பின் சஹலின் சகோதரர் ஆவார். அன்னார் பத்ர், உஹது மற்றும் அகழ் போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் அகழ் போரில் ஷஹீதானர்கள்.

அன்னார் ஹம்ராவுல் அஸது போரில் கலந்து கொண்டது தொடர்பாக சபலுல் ஹுதாவில் இவ்வாறு காணப்படுகிறது. இது மதீனாவிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும். உஹது போரில் அன்னாரும் அன்னாரது சகோதரரும் மிகவும் கடுமையாக காயமுற்றிருந்தார்கள். போரில் காயமுற்றிருந்தார்கள். இந்த இரண்டு சகோதரர்களும் ஹம்ராவுல் அஸதில் கலந்து கொள்வது தொடர்பான பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளை செவியேற்றதும் ஒருவர் மற்றவரிடம், நாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போரில் கலந்து கொள்ள முடியவில்லை என்றால் இது நமக்கு மிகப்பெரிய பேரிழப்பாகும். மேலும் நம்மிடம் பயணத்திற்கான எந்த வசதியும் இல்லை என்று கூறினார்.

அதற்கு அப்துல்லாஹ் அவர்கள், என்னுடன் வாருங்கள்! நாம் நடந்து செல்வோம் என்று கூறினார்கள். அதற்கு ராஃபி அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! காயமுற்றிருப்பதன் காரணமாக என்னால் நடப்பதற்கான ஆற்றல் இல்லை என்று கூறினார். அதற்கு அவரது சகோதரர் வாருங்கள்! நாம் நடந்தவாறு மெதுவாக செல்வோம். நபி (ஸல்) அவர்களிடம் செல்வோம் என்று கூறினார்கள். எனவே இருவரும் நடந்து சென்றனர். ஹஸ்ரத் ராஃபி அவர்கள் பலவீனத்தை உணர்ந்தபோது ஹஸ்ரத் அப்தில்லாஹ் அவர்கள் ஹஸ்ரத் ராஃபி அவர்களை தமது முதுகில் தூக்கி வைத்துக் கொண்டு சிறிது நேரம் நடந்து செல்வார்கள். இறுதியாக இருவரும் இஷா நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். அந்த இரவில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் அவர்கள் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த இருவரிடமும், எந்த விஷயம் உங்களைத் தடுத்து நிறுத்தியது என்று கேட்டார்கள். அதற்கு இருவரும் அதற்கான காரணத்தைக் கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த இருவருக்காகவும் நன்மையை வேண்டி துஆ செய்தவாறு, உங்கள் இருவருக்கும் அல்லாஹ் நீண்ட ஆயுளை வழங்கினால் உங்களுக்கு குதிரை, ஒட்டகம் போன்ற வாகனங்கள் கிடைப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். இப்போது நீங்கள் விழுந்து எழுந்து இங்கு வந்துள்ளீர்கள். ஆனால் நீண்ட ஆயுளைப் பெற்றால் இந்த அனைத்து வானங்களும் உங்களுக்குக் கிடைப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். ஆனால் அத்துடன் அன்னார் (ஸல்) அவர்கள் இதனையும் கூறினார்கள். அதாவது, அது உங்கள் இருவருக்கும் நீங்கள் நடந்து விழுந்து எழுந்து வந்த இந்த பயணத்தை விட சிறந்ததாக இருக்காது. இதற்குரிய கூலியும், இதன் அருட்களும் மிக மிக அதிகமாகும் என்று கூறினார்கள்.

ஹம்ராவுல் அஸது போர் தொடர்பாக சில விளக்கங்களை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள். உஹது போருக்குப் பிறகு வந்த அந்த இரவு மதீனாவில் மிகவும் அச்சத்திற்குரிய இரவாக இருந்தது. ஏனென்றால் குரைஷி படையினர் மக்காவிற்கு சென்று விட்டனர் என்றாலும் அவர்களது நடவடிக்கை முஸ்லிம்களை கவனமற்றவர்களாக ஆக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக இருக்கலாம் என்ற அச்சம் இருந்தது. எனவே அந்த இரவில் மதீனாவில் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு குறிப்பாக பாதுகாப்பு பணியை இரவில் சஹாபாக்கள் மேற்கொண்டனர். காலை விடிந்ததும் அந்த அச்சம் வெறும் எண்ணத்தினால் ஏற்பட்டதல்ல என்பது தெரிய வந்தது. ஏனென்றால் ஃபஜர் தொழுகைக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு, குரைஷி படையினர் மதீனாவிலிருந்து சில மைல் தொலைவில் தங்கியுள்ளனர். மேலும் மக்கத்து தலைவர்களுக்குள், இந்த வெற்றியிலிருந்து பயன் பெற்றவாறு மதீனாவின் மீது ஏன் தாக்குதல் தொடுக்கப்படக் கூடாது என்று வாக்குவாதம் செய்து கொண்டிருக்கின்றனர் என்ற செய்தி கிடைத்தது.

இதற்கு மாற்றமாக வேறு சிலர் இவ்வாறு கூறி வந்தனர். அதாவது உங்களுக்கு ஒரு வெற்றி கிடைத்துள்ளது. அதனை பொக்கிஷமாகக் கருதி மக்காவிற்கு திரும்பிச் செல்லுங்கள். இல்லையென்றால் இந்த வெற்றி தோல்வியின் வடிவில் உங்களுக்கு மாறி விடலாம். ஏனென்றால் இப்போது நீங்கள் மீண்டும் மதீனாவிற்கு திரும்பி தாக்குதல் தொடுத்தால் நிச்சயமாக அவர்கள் உயிரை அர்ப்பணித்தவாறு சண்டையிடுவர். மேலும் எவர்கள் உஹது போரில் கலந்து கொள்ளவில்லையோ அவர்களும் கலந்து கொள்வதற்காக வருகை தருவர்.

இந்த விஷயம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்ததும் அன்னார், முஸ்லிம்கள் ஆயத்தமாகுங்கள் என்று கூறியதுடன் உஹது போரில் பங்கு பெற்றவர்களைத் தவிர வேறு எவரும் நம்முடன் வர வேண்டாம் என்றும் கட்டளையிட்டார்கள். எட்டு மைல் தூரத்தை கடந்து ஹம்ராவுல் அஸதை பெருமானார் (ஸல்) அவர்கள் சென்றடைந்தார்கள். அங்கு மைதானத்தில் இரண்டு முஸ்லிம்களின் உடல்கள் அவர்களுக்கு கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்களுக்காகவும் ஒரு கபரைத் தோண்டி அதில் இருவரையும் நல்லடக்கம் செய்தார்கள். மேலும் அங்கேயே கூடாரத்தை அமைத்து மைதானத்தின் பல்வேறு இடங்களில் நெருப்பை மூட்டுமாறும் கட்டளையிட்டார்கள்.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஹம்ராவுல் அஸது மைதானத்தில் 500 நெருப்பு ஜுவாளைகள் மூட்டப்பட்டன. அந்த நெருப்பானது தொலை தூரத்திலிருந்து பார்க்கக் கூடியவரையும் அச்சமூட்டக் கூடியதாக இருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் இணை வைப்பவர்களைச் சேர்ந்த கஸாஆவின் கோத்திரத்தின் தலைவனான மஃபத் என்ற பெயருடைய ஒருவன் பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தான். அன்னாரிடம் உஹது மைதானத்தில் கொலை செய்யப்பட்டவர்களைக் குறித்து தமது அனுதாபத்தை வெளிப்படுத்தினார்.

அடுத்த நாள் மதீனாவிலிருந்து 40 மைல் தொலைவிலுள்ள ரூஹா என்ற இடத்தை அவர் அடைந்ததும் குரைஷிகளின் படை கூடாரம் அமைத்திருப்பதையும், வாக்குவாதம் செய்தவாறு அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பி வருவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருப்பதையும் பார்த்த மஃபத் அபூ சுஃப்யானிடம் சென்று, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இப்போது தான் ஹம்ராவுல் அஸதில் முஹம்மது (ஸல்) அவர்களின் படையை கடந்து வருகின்றேன். இத்தகைய அச்சமூட்டக்கூடிய படையை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அவர் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதில் எந்த அளவுக்கு எழுச்சியுடன் காணப்படுகின்றார்கள் என்றால் உங்களைப் பார்த்தவுடன் உங்களை பொசுக்கி விடுவார்கள் என்று கூறினார்.

அபூ சுஃப்யான் மற்றும் அவனுடன் இருந்தவர்களுக்கு மஃபத் கூறிய கூற்றின் தாக்கம் ஏற்பட்டது. அந்த அச்சத்தினால் அவர்கள் மதீனாவிற்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு விட்டு மக்காவிற்கு திரும்பிச் சென்றனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு குரைஷிகளின் படை திரும்பிச் சென்ற செய்தி கிடைத்தும் அன்னார் அல்லாஹ்விற்கு நன்றி தெரிவித்தார்கள். மேலும் கூறினார்கள்: இது குரைஷிகளின் உள்ளத்தில் அல்லாஹ் ஏற்படுத்திய அச்சமாகும் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உத்பா பின் ரபீஆ ஆகும். அன்னார் பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பேற்றைப் பெற்றார்கள்.

அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி கூறுகின்றார்கள்: யர்மூக் போரில் கலந்து கொண்டவர்களில் உத்பா பின் ரஆபீ வின் பெயரும் வருகின்றது. யர்மூக் போர் ஹிஜ்ரி 12–13 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் காலித் பின் வலீத் அவர்களின் தலைமையில் ரோமானியர்களுடன் நடைபெற்றது. ரோமானிய படையின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டு லட்சத்திலிருந்து 2,50,000 வரை இருந்தது என்று கூறப்பபடுகிறது. மேலும் முஸ்லிம்களின் எண்ணிக்கை 37,000 லிருந்து 46,000 ற்குள் இருந்தது என்று கூறப்படுகின்றது.

இஸ்லாமிய படையில் ஆயிரம் பேர் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தை கண்டிந்தார்கள். 100 சஹாபாக்கள் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் பத்ர் போரில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். இரு தரப்பினருக்கும் கடுமையான போர் நடைபெற்றது. அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். ஆனால் காலித் பின் வலீத் அவர்கள் இந்த செய்தியை படையினரிடம் சென்றடைவதிலிருந்து தடுத்து விட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் முஸ்லிம்கள் நிலைத்து நின்றனர். மாலை நேரம் வரை சண்டை நீடித்தது. அதற்குப் பிறகு ரோமானிய படை பின்வாங்கி ஓடியது. இந்த சண்டையில் ஒரு லட்சத்தை விட அதிகமான ரோமானிய படையைச் சார்ந்தவர்கள் அழிந்து போயினர். மேலும் 3000 முஸ்லிம்கள் இந்த போரில் ஷஹீதாகினர். இந்த ஷுஹதாக்களில் ஹஸ்ரத் இக்ரிமா மற்றும் அபூ ஜஹிலும் அடங்குவர். யர்மூக் போருக்குப் பிறகு இஸ்லாமிய படை முழு சிரியாவிலும் பரவியது. மேலும் கனஸ்ரீன், இன்தாகியா, ஜூமா, சர்மீன், திஸீன், கூரிஸ், தல்ஆஸாத், ஸலூக், ரபான் போன்ற இடங்களை மிக எளிதாக இஸ்லாமிய படை வெற்றி பெற்றது.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்போது நான் ஒரு நற்குறிப்பை எடுத்துக் கூறுவேன். அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பேரனான ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் பேத்தி மதிப்பிற்குரிய ஸாஹிப்ஸாதி சபீஹா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். ஹஸ்ருத் மிர்ஸா ரஷீத் அஹ்மது சாஹீப் அவர்களின் மூத்த மகள் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) மற்றும் ஹஸ்ரத் உம்மே நாஸிர் (ரலி) அவர்களின் மகனான ஸாஹிப் ஸாதா மிர்ஸா அன்வர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். 30 ஏப்ரல் அன்று தமது 90 வது வயதில் தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். انا للہ وانا الیہ راجعون

**மொழியாக்கம்: முஅல்லிம் A. கலீல் அஹ்மது**